REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 14 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 296 | December 14, Monday, 2020 | 24 பக்கங்கள் | 30/-




தேசிய மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கொவிட்–19 சிகிச்சை முறை;

## கொரோனா எதிர்ப்பு ஔடதங்களை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தவும்

### தேசிய ஆராய்ச்சி சபைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்து

கொவிட்19 தொற்றுக்கு தேசிய மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிகிச்சை முறை மற்றும் ஔடதங்களை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேசிய ஆராய்ச்சி சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய கொழும்பு பல்கலைக்கழகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் மருத்துவமொன்றை, கலாநிதி ஹர்ஷ சுபசிங்க மற்றும் இந்திக ஜாகொட ஆகியோரினால் தயாரிக்கப்பட்ட உள்ளூர் சிகிச்சை முறை மற்றும் கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத வைத்தியரின் ஔடத பாணியை மேலும் விஞ்ஞான ரீதியில் ஆய்விற்கு உட்படுத்தி உறுதிப்படுத்துவதற்கு பிரதமர் தேசிய ஆராய்ச்சி சபைக்கு பரிந்துரைத்துள்ளார்.



கேகாலை தம்மிக பண்டார ஆயுர்வேத வைத்தியரின் ஔடத பாணி தொடர்பான ஆராய்ச்சி பத்திரமொன்று ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பேராசிரியர்களின் தலையீட்டுடன் முன்வைக்கப்படுவதுடன், அது தொடர்பான ஆய்விற்கு இந்நாட்டின் அனைத்து மருத்துவ கல்லூரிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உடலியல் விஞ்ஞானம் தொடர்பான நிபுணத்துவ அறிவுமிக்க சிரேஷ்ட பேராசிரியர்கள் ஐந்து பேர் மற்றும் தேசிய ஆராய்ச்சி சபைக்காக தேசிய ஆராய்ச்சி சபையின் தலைவர் மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் வைத்திய நிபுணர் பேராசிரியர் ஹேமந்த தொடம்பஹல ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், உலகில் கொவிட்19 தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி வகைகள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பிலான அறிக்கை 06

## பாகிஸ்தானில் காலமான யாழ்ப்பாணத்து ஆயர்

### 1973 இலிருந்து அங்கு இறை பணியாற்றினார்



பாகிஸ்தானின் குவேற்றா மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆயர் காலமாகியுள்ளார். யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த பேரருட் கலாநிதி விக்ரர் 06

## ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தலைவராக சம்பிக்க?

### சஜித் வழங்கவுள்ளதாக தகவல்



ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து, பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விலகியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் அவருக்கு புதிய பதவியொன்று கிடைக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தலைவராக அவர் விரைவில் நியமிக்கப்படலாம் 06

## குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்படுவர்

### படத்துடன் விபரமும் வெளியிடப்படும் என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களின் புகைப்படங்கள், விபரங்களை பகிரங்கப்படுத்தவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு விவகார அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை, கொள்ளை, தாக்குதல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் என சந்தேகிக்கப்படுபவர்களின் படங்கள், விபரங்களை ஊடகங்களிற்கு எதிர்காலத்தில் வெளியிடவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் குறித்த விபரங்களை அறிந்து கொள்வதை உறுதி செய்வதற்காகவும் இதன் காரணமாக ஏற்பட்ட அவமானத்தினாலும் அச்சத்தினாலும் குற்றவாளிகள் மீண்டும் அவ்வாறான செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்கும் நிலையை ஏற்படுத்துவதற்காகவுமே படங்கள். விபரங்களை பகிரங்கப்ப 06



தேங்கிக்கிடக்கும் பல்லாயிரக்கணக்கான வழக்குகள்;

## நீதிமன்ற வழக்குகளை துரிதகதியில் விசாரணை செய்து முடிக்க ஏற்பாடு

### உயர்நீதிமன்றம் முதல் ஏனைய நீதிமன்றங்களிலும் நடவடிக்கை -நீதியமைச்சர்

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான வழக்குகளை துரிதகதியில் விசாரணை செய்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.



நிலைமையை அடுத்து இந்த ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனடிப்படையில் உயர்நீதிமன்றத்தில் தொடங்கி ஏனைய நீதிமன்றங்களிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் மெய்நிகர் நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்திருக்கிறார். பெரும்பாலும் இந்த நடைமுறை அடுத்த ஆண்டு ஆரம்பம் 06

கொரோனாவில் இறக்கும் முஸ்லிம்களின் தகனம்;

## லண்டனில் இலங்கை தூதரகம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில், உயிரிழக்கும் முஸ்லிம்களின் கட்டாய தகனங்களுக்கு எதிராக லண்டனில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் முன் நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.




போராட்டத்தின் போது ஏராளமானோர் உயர் ஸ்தானிகராலயத்திற்கு வெளியே கூடி பதாதைகளை ஏந்தி போராடினர். கொழும்பில் அதிகாரிகளால் தகனம் செய்யப்பட்டவர்களில் 20 நாள் குழந்தையின் படங்களையும் போராட்டக்காரர்கள் இதன்போது காட்சிப்படுத்தியிருந்தனர்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தகனங்களை 06




...ப்பின்

...க்கும்



கத்தன்மையும் உண்மையான மதிப்பும் இருந்தால், அது நாட்டின் கவனத்திற்கு எதிராக தயாரிக்கப்பட்டுள்ள சுதேச மருந்து தொடர்பில் 06

## பேலியகொடை புதிய மெனிங் சந்தை இன்று முதல் திறப்பு



பேலியகொடை புதிய மெனிங் சந்தை மொத்த வர்த்தகத்திற்காக இன்று திறக்கப்படும். பிற்பகல் 4.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரை அங்கு வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக மெனிங் வர்த்தக பொது சங்கத்தின் தலைவர் 06

## இன்று சில பகுதிகள் விடுவிப்பு; மயூரா பிளேஸ் முடக்கப்படுகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் சில பிரதேசங்கள் இன்று தனிமைப்படுத்தலுக்கான முடக்கத்திலிருந்து விடுவிக்கப்படுவதுடன் மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதாக கொரோனா வைரஸ் தடுப்பு தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, பொரளை பொலிஸ் பிரிவுகளில் உள்ள சில பிரதேசங்கள் இன்று காலை 5 மணி முதல் 06



ஜே.வி.பியின் தொழிற்சங்கம் ஏற்பாட்டில்

## ஆயிரம் ரூபாவை வலியுறுத்தி மஸ்கெலியாவில் ஆர்ப்பாட்டம்



கொரோனா பரவல் உண்மை நிலவரம்;

## மக்களுக்கு தெரியப்படுத்துவது அவசியம் என்கிறது PHI சங்கம்

## விடுவிக்கப்பட்ட வீடமைப்பு திட்ட